## குதிரை பேரத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள

# முதலமைச்சர் மீது வழக்குப் பதிய உத்தரவிடுக!

## ஆளுநருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடிதம் !

**சென்னை, ஜூலை 3 -**

**“குதிரை பேரத்தில் முதலமைச்சர் நேரடியாக ஈடுபட்டுள்ளதால் அவர் மீது வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுத்திட உத்தரவிட வேண்டும்” என்று தமிழ்நாடு ஆளுநருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடிதம் எழுதியுள்ளார்.**

த.வெ.க. அரசின் குதிரை பேரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு ஆளுநருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடித்தில், கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.எம். ராஜேந்திரன் மற்றும் சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.செந்தில் செல்வன் ஆகிய இருவரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

### வைகோ - ஜோசப் விஜய் கூட்டு சதி!

இந்நிலையில், ஆளும் தமிழக வெற்றிக் கழக அரசுக்குப் பெரும்பான்மை இல்லாததால், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் அவர்கள் இருவரையும் பதவி விலகச் செய்ய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்களுடன் இணைந்து முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் கூட்டுச் சதியில் ஈடுபட்டதை வைகோ அவர்களே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய குதிரை பேரத்தில் முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஈடுபட்டுள்ளதால் அவர் மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.



முதல்வர் ஜோசப் விஜய்யே நேரடியாக குதிரை பேரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி, ஆளுநர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி 7 பக்க புகார் கடிதம் அளித்துள்ளார். ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் கருத்தை புகாரில் சுட்டிக்காட்டிய அவர், ஜோசப் விஜய் மீது வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

### த.வெ.க.வுக்கு பெரும்பான்மை இல்லை!

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் த.வெ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. 108 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி அமைத்து வருகிறது. இந்த நிலையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் ஒவ்வொருவராக ராஜினாமா செய்து தவெகவில் இணைந்து வருகின்றனர். இதனை எதிர்க்கட்சியான தி.மு.க. விஜய் அரசு குதிரை பேரத்தில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டி வந்தது.

இந்த நிலையில் தான் சமீபத்தில் தி.மு.க. கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. வெளியேறியது. அப்போது பேசிய வைகோ, “உங்கள் 2 எம்.எல்.ஏ.க்கள் கட்சி ராஜினாமா செய்தால், உங்கள் 2 உறுப்பினர்களையும் வெல்ல வைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு” என முதலமைச்சர் ஜோசப் விஜய் தன்னிடம் உத்தரவாதம் அளித்ததாக கூறினார். வைகோவின் இந்த கருத்தை வைத்து விஜய் குதிரை பேரத்தில் ஈடுபட்டதை வைகோவே ஒத்துக்கொண்டுள்ளார் எனவும் தி.மு.க. குற்றம்சாட்டியது.

இந்த நிலையில் தான் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆளுநர் அர்லேகர் மற்றும் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.எம்.ராஜேந்திரன் மற்றும் சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.செந்தில் செல்வன் ஆகிய இருவரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

இந்நிலையில், ஆளும் தமிழக வெற்றிக் கழக அரசுக்குப் பெரும்பான்மை இல்லாததால், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் அவர்கள் இருவரையும் பதவி விலகச் செய்ய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்களுடன் இணைந்து முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் கூட்டுச் சதியில் ஈடுபட்டதை வைகோ அவர்களே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய குதிரை பேரத்தில் முதலமைச்சர் அவர்களே நேரடியாக ஈடுபட்டுள்ளதால் அவர் மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு உத்தரவிட வலியுறுத்தி உள்ளார்.

வைகோ பேசியது குறித்து வீடியோ காட்சிகளையும் அதனுடன் சேர்த்து கடிதமாக அனுப்பியுள்ளார். மொத்தம் 7 பக்கத்திற்கு அந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வைகோ கூறியதை வைத்து பார்க்கும் போது விஜய்யே நேரடியாக குதிரை பேரத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அந்த புகார் கடிதத்தில் கூறியுள்ளார்.

சென்னையில் நடந்த ம.தி.மு.க.வின் பொதுக்குழு மற்றும் உயர்மட்டக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தி.மு.க. கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. வெளியேறுவதாக அறிவிக்கப்பட்டது. எதிர்கால தேர்தல் கூட்டணி தொடர்பான முடிவை தேர்தல் நேரத்தில் ம.தி.மு.க. வெளியிடும் என தெரிவிக்கப்பட்டது. அப்போது செய்தியாளர்களிடம் பேசிய வைகோ,

2 உறுப்பினர்களை வெல்ல வைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு என விஜய் என்னிடம் உத்தரவாதம் அளித்தார்” என்று பேசினார்.

வைகோவின் இந்த பேச்சை வைத்து தி.மு.க.வினர் அப்போதே விஜய் நேரடியாக குதிரை பேரத்தில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றச்சாட்டு வைத்து வந்தனர். இந்நிலையில் தான் விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆளுநர் அர்லேகர் மற்றும் தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனருக்கு 7 பக்க கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

ஆக, ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தனது கடிதத்தில், வைகோ பேட்டி தொடர்பாக சன் நியூஸ், நியூஸ் 18, தமிழ்நாடு, பிஹைன்ட் உட்ஸ், யூடியூப், நக்கீரன் டி.வி. உள்ளிட்டவைகளில் வெளியானது தொடர்பான இணையதள முகவரிகளை குறிப்பிட்டுள்ளார்.

மெஜாரிட்டி பெற வேண்டும் என்பதற்கு, குதிரை பேரத்தில் ஈடுபட்டதன் விளைவாக, ஏற்கனவே அ.தி.மு.க. விலிருந்த சட்டமன்ற உறுப்பினர்களான, எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கர், மரகதம் குமரவேல், எஸ்.ஜெயகுமார், பி.சத்தியபாமா, இசக்கி சுப்பையா என 6 பேரை ஒருவர் பின் ஒருவராக ராஜினாமா செய்ய வைத்துள்ளார்.

அத்துடன் அவர்களை த.வெ.க. கட்சியில் சேர்த்தும் வருகின்றார். சட்ட நடைமுறை, தேர்தல் நடைமுறைகளை மீறி, இப்படி சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய வைத்து த.வெ.க. கட்சியில் இணைத்துக் கொள்கின்றனர்.

மாநில ஆளுநராக இருப்பவருக்கு நடைபெறும் இவைகளெல்லாம் தெரியாமல் இருக்க முடியாது. ஆளும் கட்சியின் இதுபோன்ற குதிரை பேர ஊழல் நடவடிக்கைகளை கண்டும் காணாமல் இருந்து விடாதீர்கள்.

முதலமைச்சர் ஜோசப் விஜய் குறிப்பிட்டதாக வைகோ கூறி இருப்பது ஜனநாயகத்தின் அடித்தளத்தையும், தேர்தல் முறைகளின் ஒருங்கிணைப்பையும் அரசியல் சட்டத்தையும் மீறுவதாக உள்ளது.

முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்து, பின் அவர்களை ஆளும் கட்சியில் சேர்த்து மெஜாரிட்டி கொண்டு வர எண்ணுவது எந்த வகையிலும் முறையல்ல.

எனவே இது குறித்து பாரபட்சமற்ற விசாரணையை உரிய முறையில் மேற்கொண்டு உண்மை நிலையை கண்டறிந்து தவறு செய்தவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள லஞ்ச ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றும் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குதிரை பேர சதி தொடர்பாக, வைகோவுக்கும் முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கும் இடையே நடந்த உரையாடல் பற்றிய வைகோ பேச்சின் PEN DRIVE ஐயும் அக்கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

---

### கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக் கனிமச் சுரங்கம் அமைக்க IREL நிறுவனத்திற்கு அளித்த கால நீட்டிப்பு கண்டனத்திற்குரியது!

# ஓராண்டு கால நீட்டிப்பு உத்தரவை உடனே ரத்து செய்க!

## எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கோரிக்கை!

*கன்னியாகுமரி, ஜூலை 3-*

கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக்கனிமச் சுரங்கம் அமைப்பதற்கு IREL ஆலைக்கு 1 ஆண்டு கால அவகாசத்தை நீடித்து கொடுத்துள்ள த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலுகாவிற்குட்பட்ட கீழ் மிடாலம் A, மேல்மிடலாம் B, இனயம் புத்தன்துறை, ஏழுதேசம் A,B மற்றும் கொல்லங்கோடு A,B,C வருவாய் கிராமங்களுக்குக் குட்பட்ட பகுதியில் 1144.618 ஹெக்டேர் நிலங்களில் அணுக்கனிமச் சுரங்கம் அமைத்து இல்மனேட் சிர்கான் புளுடோனியம் மோனோசைட் தோரியம் போன்ற கனிமங்களை பிரித்தெடுப்பதற்கு இந்திய அரிய மணல் ஆலை நிறுவனத்திற்கு (IREL) தமிழ்நாடு அரசு மூலம் அனைத்து தடையில்லா சான்றுகளையும் பெற்று ஆலை தொடங்குவதற்கு IREL நிறுவனத்திற்கு 10.6.2026 வரை 5 ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அந்த கால அவகாசம் முடிவடைய இருந்த நிலையில்- இது தொடர்பாக ஒன்றிய அரசு கடந்த காலங்களில் தமிழ்நாடு அரசிற்கு பல முறை கடிதம் மூலம் தடையில்லா சான்றுகள் வழங்கி ஆலைக்கான அனுமதி வழங்கிட அழுத்தம் கொடுத்தது. இத்திட்டம் அமைந்தால் சுற்று சூழல் பாதிக்கப்பட்டு புற்று நோய் பாதிப்பு அதிகரிக்கும். நிலத்தடி நீர் பாதிப்புள்ளாகும். கடலரிப்பு ஏற்பட்டு கடற்கரை கிராமங்களை அழிவிற்குள்ளாக்கும். விவசாய நிலங்களில் கடல் நீர் புகுந்து விவசாயம் பாதிப்பிற்குள்ளாகும். எனவே இத்திட்டத்தை கை விட வேண்டும் என அப்பகுதி பொது மக்கள் போராட்டம் நடத்தினர்.

எங்கள் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது போராடிய மக்களின் பிரதிநிதிகளை 24.03.2025 அன்று அழைத்துப் பேசி “மக்களை பாதிக்கும் எந்த திட்டத்தையும் இந்த அரசு அனுமதிக்காது. இத்திட்டத்தை கைவிட கேட்டு ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்போம். சுற்று சூழல் அனுமதி மாநில அரசு வழங்காது. வாழ்வாதாரத்திற்காக போராடும் மக்களுடன் இந்த அரசு துணையாக நிற்கும்” என வாக்குறுதி வழங்கினார்கள். அந்த அடிப்படையில் கடந்த ஐந்தாண்டு காலமாக IREL-க்கு எந்த வித அனுமதியும் திராவிட மாடல் அரசு வழங்கவில்லை. ஒன்றிய அரசு இதில் மக்கள் கருத்து கேட்பு நடத்த வேண்டியதில்லை என ஒரு திருத்தத்தை கொண்டு வந்து மாநில அரசு நிலம் கையகப்படுத்தி வழங்க வேண்டும் என மாநில அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்த போதிலும்- எங்கள் கழகத் தலைவர் முதலமைச்சராக இருந்த வரை எந்த நிர்பந்தத்திற்கும் அடிபணியவில்லை. எந்த அனுமதியும் வழங்கவுமில்லை.

ஏற்கனவே ஒன்றிய அரசு IREL நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 5 ஆண்டு கால கால அவகாசம் 10.06.2026 அன்று முடிவடைகிற நிலையில்- IREL நிறுவனத்திற்கு மேலும் ஒரு ஆண்டு கால அவகாசம் நீடித்து வழங்க வேண்டுமென கோரியதனை ஏற்று, ஒன்றிய அரசின் அழுத்தத்திற்கு அடிபணிந்து தற்போதைய த.வெ.க. அரசு 10.06.2026 முதல் மேலும் ஒரு ஆண்டு காலம் கால அவகாசத்தை நீட்டித்து கொடுத்து அரசாணை வெளியிட்டுள்ளது கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்ட மக்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. மக்கள் விரோத நிலைப்பாட்டை எடுத்து-த.வெ.க. அரசு வழங்கியுள்ள இந்த கால அவகாசம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. முதலமைச்சர் ஜோசப் விஜய் அரசின் இந்த உத்தரவு அந்த பகுதி மக்கள் குறிப்பாக மீனவர்கள் மத்தியில் மிகவும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. புதிய கால நீடிப்பு ஆணையை இந்த அரசு வழங்காமல் இருந்திருந்தால் இந்த திட்டமே கைவிடப்பட்டிருக்கும். இந்த அரசின் மக்கள் விரோத செயலால் IREL நிறுவனம் ஒன்றிய அரசின் மூலம் மாநில அரசுக்கு அழுத்தம் கொடுத்து அனைத்து தடையில்லா சான்று மற்றும் அனுமதிகளையும் பெற்று ஆலையை தொடங்கிவிடும் அபாயம் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 2024 நவம்பரில் நடந்த த.வெ.க. செயற்குழு கூட்டத்தில் “இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க கூடாது” என IREL நிறுவனத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிவிட்டு தற்போது ஒன்றிய அரசிற்கு அடி பணிந்து மக்கள் விரோத ஆணையை வழங்கி உள்ளதை இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் பா.ஜ.க. அரசுக்கும்- தவெக அரசுக்கும் உள்ள நெருக்கத்தை வெளிப்படுத்துகிறது. 5 ஆண்டு காலம் தி.மு.க. அரசு அனுமதி வழங்காத இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு பயந்து IREL-க்கு அனுமதி வழங்கி மாவட்டத்தையே அழிக்க துணிந்து விட்டது த.வெ.க. அரசு.

எனவே IREL நிறுவனத்திற்கு தற்போது வழங்கியுள்ள கால அவகாச நீட்டிப்பு அரசாணையை ரத்து செய்து உடனடியாக ஆணை வெளியிட வேண்டும் என்றும், இல்லையென்றால் இப்பகுதி மக்கள் ஒன்றாகத் திரண்டு த.வெ.க. அரசின் மக்கள் விரோத செயலுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என எச்சரிக்கையாக தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## விஜய்யின் மாற்று அரசியல் சாயம் வெளுத்துவிட்டது!

# ஊழல்வாதிகளைப் புனிதர்களாக மாற்றும் த.வெ.க. வாஷிங் மெஷின்!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

‘தூய சக்தி’ ‘வாஷிங் மெஷின்’ சக்தியானது! இதுதான் ஊழலை ஒழித்த டம்மியின் இலட்சணம்!

**நாங்கள் ஊழலற்ற தூய்மையான ஆட்சியைத் தருவோம் என்று மேடைக்கு மேடை எழுதிக் கொடுக்கப்பட்ட சினிமா வசனம் பேசி தமிழ்நாட்டு இளைஞர்களை ஏமாற்றிய முதல்வர் விஜய்யின் மாற்று அரசியல் சாயம் இன்று முழுமையாக வெளுத்துவிட்டது!**

சட்டவிரோதப் பணப்பரிவர்த்தனை ED வழக்கு, குட்கா ஊழல் CBI வழக்கு, வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக் குவிப்பு, அரசு முத்திரையையே போலியாகத் தயாரித்து மோசடி செய்ததும், அனுமதியின்றி மணல் கொள்ளையில் ஈடுபட்டதுமான கிரிமினல் வழக்குகளில் சிக்கிய ஊழலின் உச்சத்தில் இருக்கும் விஜயபாஸ்கர்களைப் புனிதர்களாக மாற்றும் வாஷிங் மெஷினாக மாறிவிட்டது நிழல் முதல்வர்களின் கட்டுப்பாட்டில் உள்ள த.வெ.க.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் விமர்சித்துள்ளது.






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம்,வேலாண்டிபாளையம் பகுதி, 36வது வட்டச் செயலாளர் விஸ்வநாதன் ஏற்பாட்டில் நடைபெற்ற கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ முகாமை கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் துவக்கி வைத்தார். இதில் பகுதிப் பொறுப்பாளர்கள் எம்.கிருஷ்ணாராஜ், வ.ம.சண்முகசுந்தரம், பாலசுப்பிரமணியன், கே.எம்.ரவி, ச.குப்புசாமி, ஆ.தமிழ்மறை, தெய்வானை தமிழ்மறை, சிவகுமார், பிரவீன், மஹாலக்ஷ்மி, சின்ன தங்கம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.